செ.வெ.எண்.12 நாள்: 08.04.2019

**தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதி பொதுத்தேர்தல் பொது பார்வையாளர்கள் திருமதி.சீமா சர்மா ஜெயன், இ.ஆ.ப., அவர்கள், திரு.துக்கி சயாம் பேயிக், இ.ஆ.ப., அவர்கள், விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பொது பார்வையாளர் டாக்டர் கே.மாதவி லதா, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் தலைமையில், தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதி பொதுத்தேர்தல் மற்றும் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் ஒப்புகை சீட்டு இயந்திரம் ரேண்டம் முறையில் வாக்குச்சாவடி மையங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் பணிகள் நடைபெற்றது.**

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதி பொதுத்தேர்தல் பொது பார்வையாளர்கள் திருமதி.சீமா சர்மா ஜெயன், இ.ஆ.ப., அவர்கள், திரு.துக்கி சயாம் பேயிக், இ.ஆ.ப., அவர்கள், விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பொது பார்வையாளர் டாக்டர் கே.மாதவி லதா, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் தலைமையில், தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதி பொதுத்தேர்தல் மற்றும் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் ஒப்புகை சீட்டு இயந்திரம் ரேண்டம் முறையில் வாக்குச்சாவடி மையங்களுக்கு வேட்பாளர்கள், வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் ஒதுக்கீடு செய்யும் பணிகள் இன்று (08.04.2019) நடைபெற்றது.

நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் பேசியதாவது:-

தூத்துக்குடி மாவட்டத்தில் 1,595 வாக்குச்சாவடி மையங்கள் உள்ளன. ஏற்கனவே நடைபெற்ற முதற்கட்ட ரேண்டம் முறையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் ஒப்புகை சீட்டு இயந்திரம் எந்தெந்த தொகுதிக்கு எந்த இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது என்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது இரண்டாம் கட்ட ரேண்டம் முறையில் தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதி பொதுத்தேர்தல் மற்றும் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், வாக்கு சீட்டு இயந்திரம் மற்றும் வாக்காளர் ஒப்புகை சீட்டு இயந்திரம் ரேண்டம் முறையில் வாக்குச்சாவடி மையங்களுக்கு வேட்பாளர்கள், வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் ஒதுக்கீடு செய்யும் பணிகள் இன்று நடைபெற்றது. தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதியில் 37 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதற்காக 3 பேலட் யூனிட் மற்றும் 1 வாக்காளர் ஒப்புகை சீட்டு இயந்திரம் மற்றும் 1 வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்படவுள்ளது. வேட்பாளர்கள் சின்னம் மற்றும் பெயர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகள் நாளை (09.4.2019) முதல் நடைபெறுகிறது.

214-தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் 279 வாக்குச்சாவடி மையம், 215-திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதியில் 260 வாக்குச்சாவடி மையம், 216- ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற தொகுதியில் 259 வாக்குச்சாவடி மையம், 217 -ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதியில் 257 வாக்குச்சாவடி மையம், 218-கோவில்பட்டி சட்டமன்ற தொகுதியில் 281 வாக்குச்சாவடி மையம் மற்றும் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதியில் 259 வாக்குச்சாவடி மையம் என மொத்தம் 1,595 வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் கூடுதலாக 20 சதவித இயந்திரங்களுடன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கு தேவையான வாக்குப்பதிவு

இயந்திரங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் மு.வீரப்பன், தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரான்ஜீத்சிங்கலோன், இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) மரு.அனு, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.சுகுமார், கோட்டாட்சியர்கள் திருமதி.அமுதா (கோவில்பட்டி), செல்வி.தனப்ரியா (திருச்செந்தூர்), விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.ரவிச்சந்திரன், வேட்பாளர்கள், வேட்பாளர்களின் முகவர்கள், அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.